643

ஸ்ரீ:

ஸ்ரீமதேராமாநுஜாய நம:

இடைப்பிள்ளை மாலை.

C

திருவல்லிக்கேணித்
தமிழ்ச்சங்க வெளியீடு, 39.

சங்கக் காரியாலயம்:

ஆநந்தபிருந்தாவநம்,
ஸ்ரீ மௌனசுவாமிகள் மடத்துத் தெரு,
அம்பத்தூர்.

16-11-1952

O22:417
N52
83162

ஸ்ரீ:

திருவல்லிக்கேணித் தமிழ்ச்சங்கப் பிரசுரம்.

இலக்கம்.	வெளியீட்டின் பெயர்.	வள்ளலார் பெயர்.
1.	ஸ்ரீ ஆதிவண் சடகோப யதீந்த்ர மஹாதேசிகன் வைபவம்.	ஸ்ரீமான் வி. யன். சிங்காரவேலு முதலியார் அவர்கள்.
3.	மறைமுடித் தேசிகனர்.	ஸ்ரீமான் சுந்தரசேகர நாயக்கர் அவர்கள்.
4.	மணவாள மாமுனிகள்.	ஸ்ரீமான் ஸி. நரஸிம்மாசாரியார் அவர்கள்.
5.	அழகர் மாலே.	நற்றமிழன்பர்கள்.
6.	வேதாந்த தேசிக ரூசல்.	ஸ்ரீமான் ஆர். கேசவய்யங்கார் அவர்கள்.
9.	கம்பர் மாலே.	ராவ்ஸாஹெப். ஆர். ராமஸ்வாமி அய்யங்கார் அவர்கள்.
10.	பரிமுக மாலே.	ஸ்ரீமான் ஸ்ரீநிவாஸராகவாசாரியார் அவர்கள்.
11.	ஸ்ரீ ஆண்டாள் மாலே.	ஸ்ரீமான் பி. எஸ். திருமலே அய்யங்கார் அவர்கள்.
12.	ஸ்ரீ பார்த்தசாரதி மாலே.	ராவ்பஹதூர் கே. ஆர். ராமாநுஜம் அவர்கள்.
13.	திருவருண் மாலே. (33)	ஸ்ரீமான் ஆர். கேசவய்யங்கார் அவர்கள்.
14.	தூப்புல் வள்ளல் பழமொழிச் சிறப்பு. (34)	ப. ரெ. திருமலே அய்யங்கார்.
17.	புகழ் மாலே.	தமிழன்பர்.
18.	கம்பர் தருங் கண்ணன்.	ஸ்ரீமான் பி. சேஷாத்திரி அய்யங்கார் அவர்கள்.
19.	முக்கோற்பகவர்.	ஸ்ரீமான் ஸ்ரீநிவாஸகோபாலய்யங்கார் அவர்கள்.
20.	ஸ்ரீ வீரராகவ மாலே.	ஸ்ரீமான் ரா. கிருஷ்ணய்யங்கார் அவர்கள்.
21.	திருமாமகள் மாலே.	திருப்புகழ்மணி பிரும்மஸ்ரீ டி. எம். கிருஷ்ணஸ்வாமி அய்யர் அவர்கள்.
22.	திருநரசிங்கர் மாலே.	ஸ்ரீமான் கமலாபுரம் ஆர். ராமஸ்வாமி அய்யங்கார் அவர்கள் திருத்தேவியார் ஸ்ரீரங்கநாயகி அம்மாள்.
23.	அழகியசிங்கர் மாலே.	ஸ்ரீமான் எம். பி. கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார் அவர்கள்.

இலக்கம்.	வெளியீட்டின் பெயர்.	வள்ளலார் பெயர்.
24.	பொய்கையார் மாலே.	ஸ்ரீமான் மங்கலம் இராமாநுஜய்யங்கார் அவர்கள்.
25.	ஸ்ரீ ஆண்டாள் சந்திரகலா மாலே.	சிறந்த தேசிக பக்தர்.
26.	வாரணமாயிரமாலே.	ஸ்ரீமான் பி. எஸ். திருமலே அய்யங்கார் அவர்கள்.
27.	ஸ்ரீ பார்த்தசாரதி யம்மான் பாமாலே.	ஸ்ரீமான் பி. எஸ். கோவிந்த ராஜய்யங்கார் அவர்கள்.
28.	தமிழரேத்தும் ஸ்ரீ மணவாளமாமுனிகள்.	சந்தமிகு செந்தமிழ்ச் செல்வர்.
29.	திருச்சின்னமாலே.	ஸ்ரீமான் கே. துரைசாமி அய்யங்கார் அவர்கள்.
30.	திருவேங்கடவர்மாலே.	நான்மறையாளர்கள்.
31.	மார்கழி மாலே.	ஸ்ரீமான் பூண்டி அச்சுத கோபாலா சாரியார் அவர்கள்.
32.	மதுரகவி மாலே.	ஸ்ரீமான் கே. எஸ். ஸ்ரீநிவாஸாசாரியார் அவர்கள்.
33.	திருவருட்சதக மாலே.	ஸ்ரீமான் என். கிருஷ்ணய்யங்கார் அவர் கள்.
34.	சீரொன்று தூப்புற்றனியன் மாலே.	அருள் வரதரடியார்.
35.	மும்மறைத் தெளிவுப்பொருண் மூதுரை மாலே.	ஸ்ரீமான் அமிஞ்சிக்கரை ஆதிநாராயண ஸ்வாமி ரெட்டியார் அவர்கள்.
36.	அருளாளர் மாலே.	ஸ்ரீமான் திண்டுக்கல் ராமஸ்வாமி அய்யங் கார் அவர்கள்.
37.	பூங்கோதை மாலே.	ஸ்ரீமான் பி. எஸ். கிருஷ்ணய்யங்கார் அவர்கள். ஸ்ரீமான் பி. எஸ். நாராய ணய்யங்கார் அவர்கள்.
38.	பூமகள் மாலே.	ஸ்ரீமான் பி. கோபாலாசார்யா அவர்கள்.
39.	இடைப்பிள்ளே மாலே.	ஸ்ரீமான் பி. ஏ. சந்தானமய்யங்கார் அவர் கள்.

பெறும் இடம்: ஆநந்த பிருந்தாவநம்,
ஸ்ரீ மௌனசுவாமிகள் மடத்துத் தெரு, அம்பத்தூர்.

2, 7, 8, 15, 16 இலக்கம் உள்ளவை இப்போது கைவசமில்லே.

ஸ்ரீ:

ஸ்ரீமதேராமாநுஜாய நம:



இடைப்பிள்ளை மாலை.

திருவல்லிக்கேணித் தமிழ்ச்சங்க வெளியீடு-39.

இது

ஸர்வமங்கள நந்தனவாண்டு கார்த்திகைத் திங்கள்
முதல்தேதி பெருஞ்சோதித் திருநன்னாளில்
திருவல்லிக்கேணி ரதவீதியிலுள்ள திருவஹோபிலமடத்
திரு நரசிங்கன் திருவடிவாரத்தில் இடப்பெற்ற
காணிக்கை.

16-11-1952.

முதற்பதிப்பு—அக்டோபர், 1952

Kabeer Printing Works, Madras (2083)

ஸ்ரீ:

உள்ளுறை.

பக்கம்.

முகவுரை. ... 5

[பந்தல்குடி பாரத்வாஜ மாடபூசி ரெ. திருமலை அய்யங்கார், தமிழ் வித்துவான், காரியதரிசி, திருவல்லிக்கேணித் தமிழ்ச்சங்கம்.]

ஸ்ரீகோபால விம்சதி. ... 11

(ஸ்ரீவேதாந்த தேசிகர்.)

[தமிழ்ப்பா பொழிப்புரையுடன்.]

ஸ்ரீ:

முகவுரை.

கண்ணனல்லால் இல்லை கண்டீர் சரண்அது நிற்க வந்து
மண்ணின் பாரம் நீக்கு தற்கே வடமதுரைப் பிறந்தான்
திண்ணமா நும்முடைமை உண்டேல் அவனடி சேர்த்து
[உய்ம்மினோ
எண்ண வேண்டா நும்ம தாதும் அவனன்றி மற்றில்லையே.

—(திருவாய்மொழி 9-1-10.)

ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாய ஆசாரியர்களில் ப்ரதானதமர் ஸ்ரீமந்நிகமாந்த மஹாதேசிகன். அவர் அஸாதாரணமான நம் ஸ்ரீ விசிஷ்டாத்வைத ஸித்தாந்தத்திற்குச் செய்துள்ள உபகார விசேஷங்கள் அனந்தம். அவர் 'ஆசார்யன்,' 'தேசிகன்' என்கிற பதங்களுக்கு ப்ரதான வாச்யர் என்பது உலகம் உண்மையாக உணர்ந்ததே. எவ்வாறு புருஷன் என்கிற பதம் ஸ்ரீயஃபதியையே முக்கியமாகக் கூறுகின்றதோ அவ்வாறே வேதாந்தாசார்ய சப்தம் ஸ்வாமி தேசிகன் ஒருவரிடத்திலேயே முக்கியமான பொருளை உடையது. எம்பெருமானர் தரிசநத்தை நிலைநிறுத்திய ஸ்வாமியினுடைய ஜ்ஞாநோத்கர்ஷாதிகளைக் கண்டு திருவரங்கச் செல்வன் மிகவும் ஸந்துஷ்டராய்த்தாம் அது வரையில் அநிதரண ஸாதாரணமாய் வைத்துக் காப்பாற்றி வந்த 'வேதாந்தாசார்யர்' என்கிற பிருதை ஸ்வாமிக்கு அர்ச்சக முகேநப்ரஸாதித்தருளினர். இந்த அநுக்ரஹ விசேஷத்தை ஸ்வாமிதாமே

தேந தேவேந தத்தாம் வேதாந்தாசார்ய ஸம்ஜ்ஞாம்.

—(ஸ்ரீ அதிகரண ஸாராவளி–1.)

[அந்தப் பகவானுல் கொடுக்கப்பெற்ற வேதாந்தாசார்யர் என்னும் பிருதை.]

என்றும் ;

ஸ்வகமிதி ஹரிதத்தம் யாமுநஸ்தோத்ரவ்ருத்த்யாவ்யவ்ருணுத நிகமாந்தாசார்யகம்வேங்கடேச:

—(ஸ்ரீரஹஸ்யரக்ஷை.)

[தன்னுடையதென்று பகவானுல் கொடுக்கப் பெற்ற வேதாந்தாசார்யத்வத்தை பெரிய முதலியாருடைய ஸூக்தியை வ்யாக்யாநம் செய்ததினுல் ப்ரகாசம் செய்தார்.]

என்றும் ;

ஸ்ரீரங்கராஜ திவ்யாஜ்ஞாலப்த வேதாந்தாசார்யபத:

—(ஸ்ரீஸங்கற்ப சூரியோதயம், முதல் அங்கம்.)

[ஸ்ரீரங்கநாதனுடைய திவ்யாஜ்ஞையினுல் அடையப் பெற்ற வேதாந்தாசார்ய பதத்தையுடைய.]

என்றும் ;

வேண்பெரிய விரிதிரைநீர் வையத் துள்ளே
வேதாந்த வாரியனென் றியம்ப நின்றேம்.

—(தேசிகமாலை. அமிருதாசுவாதினி. 37)

என்றும் அநுஸந்தித்துப் போந்தமை காண்க. ஸ்வாமியினுடைய ஸர்வதோமுகமான ஜ்ஞானதிசயத்தைக் கடாக்ஷித்து பெரிய பிராட்டியார் 'ஸர்வதந்த்ரஸ்வதந்த்ரர்' என்கிற பிருதை ப்ரஸாதித்தருளினர். இவ்விதமான பாக்ய விசேஷம் ஸ்வாமி ஒருவருக்கேலபித்தது என்பதை

ஜயதி குருரபாதாம் வேதசூடார்யஸம்ஜ்ஞா
மநிதரஜநலப்யாம் லம்பிதோ ரங்கபர்த்ரா.

—(சண்டமாருதம். மங்களச்லோகம். 7)

[மற்றொருவருக்கும் கிடைக்காத வேதாந்தாசார்யர் என்கிற பிருதை ஸ்ரீரங்கநாதனுல் அநுக்ரஹிக்கப் பெற்ற ஸ்வாமி ஸர்வோத்க்ருஷ்டராய் விளங்குகிறுர்.]

என்று பின்புள்ளாரும் போற்றியிருப்பது நன்கு நோக்கத்தகும்.
"தேசிகனென்னுமாசான்" என்றும்,
"செந்தமிழு மாரியமுந் தேர்ந்தபொதுத் தேசிகனே!
எந்தவிதச் சித்து மியற்றவல்லாய்."

என்றும் முருகதாச சுவாமிகளென்று வழங்கும் மஹான் வண்ணச் சரபம் ஸ்ரீலஸ்ரீ தண்டபாணி சுவாமிகள் போற்றிய பெற்றி கண்டு மகிழ்க.

"த்ரயீசூடாசார்ய! த்வதுதித
மஹாஸூக்திதடிநீ ரஸாஸ்வாத
க்ரீடாரஹித ந்ருபசு ஸ்ம்ருத்யுபகமே,
ஜபேம ஸ்ரீக்ருஷ்ணய நம
இதிசாஷ்டோத்தரசதம் தத: பூதா:
ஸேவேமஹி தவபதாம்போஜ யுகளம்."

—(வைபவப்ரகாசிகா ஸ்தோத்ரம்.)

[ஓ! வேதாந்த தேசிகனே! தேவரீரிடத்திலிருந்து உண்டான திவ்ய ஸூக்தியாகிற நதியின் ரஸத்தை ருசி பார்க்கிறதாகிற விளையாட்டில்லாத இரண்டு கால் பசுவை அடியோங்கள் நினைக்கும்படி நேர்ந்தால் நூற்றெட்டுத் தடவை 'ஸ்ரீக்ருஷ்ணய நம:' என்று ஜபம் செய்வோம். பிறகு பரிசுத்தர்களாய்க் கொண்டு தேவரீருடைய தாமரை போன்ற இரண்டு திருவடிகளையும் அடைவோம்]

என்று ஸ்பஷ்டமாகக் கூறியதிலிருந்து நம் தேசிகனின் திவ்ய ஸூக்திகளே அனைவரையும் உஜ்ஜீவிப்பிக்கும் என்று தனித்து விளம்பவும் வேண்டுமோ? நம் ஸ்வாமியினுடைய ஒவ்வொரு க்ரந்த கால க்ஷேபம் ப்ரும்மாநுபவ துல்யமான அநுபவத்தை உண்டாக்கும்.

பகவான் கேவலம் திருவேங்கட முடையானாயும் கேவலம் நரஸிம்ஹ மாகவும் அவதரித்தான். ஸ்வாமி தேசிகனோ வென்றிப் புகழ்த் திருவேங்கட நாதனாயும், கவிகளுக்கும் தார்க்கிகர்களுக்கும் ஸிம்ஹமாயும் அவதரித்தருளினர்.

மறைமுடித் தேசிகனார் திருவாய் மலர்ந்தருளியுள்ள ஸ்தோத்ரங்கள் சாலச்சிறந்தவை. அந்த ஸ்தோத்ரப்ரவாகத்திலே நாம் தலைமண்டிக் கிடப்போமாயின் அரியதொரு பேற்றையடைவது மல்லாமல் இம்மை இன்பத்திலும் எழில்பெற்று வாழலாம். உலக ப்ரஸித்திபெற்ற அந்த ஸ்தோத்ர ரத்நங்களில் "ஸ்ரீ கோபால விம்சதி" என்பது ஒன்று. இது திருவயிந்தைமாநகரில் அர்ச்சா ரூபம்கொண்டு ஸேவை ஸாதிக்கிற ஸ்ரீ கோபாலன் விஷயமாக இருபது சுலோகங்களும், பலச்ருதியாக ஒரு சுலோகமும் அடங்கியது. "அங்கே நித்யவாஸமாக எழுந்தருளியிருக்கிற காலத்திலே 'தேவர்தானவர் சென்று சென்றிறைஞ்சு தண்டிரு வயிந்திரபுரத்துமேவு சோதியான மூவராகிய ஒருவனும்' பேரோலக்கமாகவிருந்து நம் விஷயமாக வேதமார்க்க ப்ரதிபாதகங்களான ப்ரபந்தங்களைச் சொல்லுமென்று அருளப்பாடிட்டருள இவரும் மஹா ப்ரசாதமென்று கைக்கொண்டு......அடமழைக்கு நிரைகலங்கிட வரைகுடை யெடுத்தவனான கோபாலன் விஷயமாக கோபால விம்சதியையும் செய்தருளினார்." (ஸ்ரீ வேதாந்த தேசிக வைபவப்ரகாசிகை) "துங்கவரைக்குடையெடுத்த கோபாலன்மேற் சொல்லினாரிருபதுமேற் சொல்லினாரே" என்பது அநந்தபாரதியார் பாடிய ஸ்ரீமத் வேதாந்த தேசிக வைபவ ப்ரகாசிகைக் கீர்த்தனை. இந்த விம்சதியில் ஸ்ரீக்ருஷ்ணனுடைய பாலலீலைகள் வர்ணிக்கப்பெற்றுள்ளன. இரண்டாம் ச்லோகத்தில் ஸ்ரீகோபால மந்திரத்தின் அர்த்தம் நிரூபிக்கப்பெற்றிருக்கிறது. இதர சில ச்லோகங்களிலும் வேறு சில கோபால மந்திரங்களின் அர்த்தமும் ப்ரதிபாதிக்கப் பெற்றுள்ளதென்று சிலர் அபிப்பிராயப் படுகிறார்கள். இதில் ஒவ்வொரு சுலோகமும் அநேக ராகங்களில் பாடக்கூடியதாய் அமைக்கப்பெற்றிருக்கிறது. இவ்வாறு தனக்குவமையில்லாத சீரும்சிறப்பும் எய்தி ஓங்கி விளங்கும் "ஸ்ரீ கோபாலவிம்சதி" தமிழில் சுலோகம், ஸுப்ரீம் கோர்ட் ஸீனியர் அட்வொகேட் ஸ்ரீமான் கேசவய்யங்காரவர்களால் இயற்றப்பெற்ற பாக்கள், (தோத்திரமாலை. பக்கங்கள் 64-67. வெளியீடு. 7) பொழிப்புரை இவற்றினோடு "இடைப்பிள்ளைமாலை" ("காவிரி யுள்ள முகந்தபிரான், இடைப்பிள்ளை"—(தேசிக மாலை. பரமபத சோபானம்.) என்ற திருநாமத்துடன் இச்

சங்கத்தின் முப்பத்தொன்பதாவது வெளியீடாகப் பிரிசுரிக்க லாயிற்று.

இம்மாலை தொடுக்கும்பணியில் எம்மையேவி அதற்குரிய பூரண பொருள் உதவியும்புரிந்த ஸ்ரீமான் பி. ஏ. சந்தானம் அய்யங்கார் (Proprietor, A. Bashyam & Co., Paint Merchants, Madras.) அவர்கட்கு எமது மனமார்ந்த வந்தனம்.

பொங்கும் மங்கலம் எங்குந் தங்குக.

ஒண்டொடியா டிருமகளுந் தானு மாகி
யொருநினைவா லீன்றவுயி ரெல்லா முய்ய
வண்டுவரை நகர்வாழ வசுதே வற்காய்
மன்னவற்குத் தேர்ப்பாக னாகி நின்ற
தண்டுளவ மலர்மார்பன் றானே சொன்ன
தனித்தருமந் தானெமக்காய்த் தன்னை யென்றுங்
கண்டுகளித் தடிசூட விலக்காய் நின்ற
கண்புதையல் விளையாட்டைக் கழிக்கின் றானே.

—(தேசிகமாலை. அதிகார சங்கிரகம் 46.)

ஸ்ரீரங்கவிலாசம்,
அம்பத்தூர்,
16—11—1952.

ப. ரெ. திருமலை அய்யங்கார்,
காரியதரிசி.

83162

ஸ்ரீ:

ஸ்ரீ கோபாலவிம்சதி.

ஸ்ரீமாந் வேங்கட நாதார்ய: கவிதார்க்கிக கேஸரீ,
வேதாந்தா சார்ய வர்யோமே ஸந்நிதத்தாம் ஸதா ஹ்ருதி.

உத்தம ஞானச் செல்வ னுயர்மறை முடிக ளுக்கு
வித்தகப் பொருளு ணர்த்து மேன்மையன் வேங்க டேசன்
எத்திறக் கவிஞ ருக்கு மேதுவா தியர்க்கு மேறு
நித்தமு மிடை விடாதெ னெஞ்சினிற் றிகழ்க நின்றே.

[உத்தம ஞான ஸம்பத்தையுடையவரும், வேதாந்தங்களுக்கு சாஸ்த்ரோக்தமான பொருளுரைப்பதில் பிரஸித்தி பெற்றவரும், திருவேங்கடநாதன் என்னும் திருநாமத்தை வகிப்பவரும், கவனம் பண்ணுபவர், ஹேதுவாதம் செய்பவர் இவர்கள் எத்திறமையோராயினும் அவர்களுக்கெல்லாம் சிங்கம்போன்றவருமான நம் தூப்புல் வேதாந்ததேசிகன் அடியேன் மனத்திலே எப்பொழுதும் வீற்றிருக்கக்கடவர்.]

O22:4:17 N52

வந்தே ப்ருந்தாவனசரம்
வல்லவீஜந வல்லபம்,
ஜயந்தீ ஸம்பவம்தாம
வைஜயந்தீ விபூஷணம். (1)

வண்டிருப் பிருதானம் வரும் திருக்
கண்டுளக் களிவண் டிள வாய்ச்சியர்
மண்டி வாழ் மணமாலை மிலைந்தருள்
கொண்டெழுஞ் சுடரொன்று வணங்கு வாம். (1)

[சிங்கத் திங்கள் கிருஷ்ணபக்ஷத்து அஷ்டமி திதியாகிய ஸ்ரீ கிருஷ்ணஜயந்தி நன்னாளிலே நானிலம் உய்ய நல்லறமோங்க

திருவவதரித்தவராகிய ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மா, அமுதங் கடைந்த காலையில் அக் கடலில் உண்டான வனமாலையை விலக்ஷணமான திருவாபரணுதிகளில் ஒன்ருகத் தரித்துக்கொண்டும், பிருந்தா வனம் என்னும் துளஸீ நிறைந்த காட்டகத்தே சிறந்த திருவிளை யாடல் புரிந்து நிறைந்து, ஆய்ப்பாடிச் செல்வச் சிறுமியர்களான கோபியர்களுக் கெல்லாம் வியாஜமாத்திரையாய் கணவராக விருந்து நடித்துக் காட்டித் திருவிளையாடல்கள் செய்தவருமான பரஞ்சோதியை வணங்குகின்றேன்.]

வாசம் நிஜாங்க ரஸிகாம் ப்ரஸமீக்ஷ மாணு
வக்த்ராரவிந்த விநிவேசித பாஞ்சஜந்ய:,
வர்ணத்ரிகோணருசிரே வர புண்டரீகே
பத்தாஸனே ஜயதிவல்லவ சக்ரவர்த்தீ. (2)

தருதன்மடி திகழ்தன்மொழி தவழ் தன்வழி விழியோன்
விரையின்கமழ் மறையின்மகிழ் நிறையின்புரி வதனன்
சரணின்திரு வருநன்பெரு வருணந்தரு திரிகோ
ணொரு பூந்தவி சுறுகோவல ரொருகோளரி பொலிவான். (2)

[எல்லாம் வல்ல கண்ணபிரான் தனது மடியில் விளையாடிக் கொண்டிருக்கும் வாக்கன்னையான வாணியை நோக்கிக்கொண்டும், பகைவர்களினது வலிமையைப் போக்கடிக்கும்படியான வலம் புரிச் சங்கத்தைத் தனது திருப்பவளவாயினிடத்தே வைத்துக் கொண்டும், முக்கோணவடிவாகிய பீஜாக்ஷர ஸஹிதமான தாமரை மலரில் பொலிவோடு எழுந்தருளி மிகவும் சிலாக்கியமான சோபை யோடு பிரகாசித்துக்கொண்டு மிருக்கின்ருன். அவனன்றே மூவுலகாக்ஷியும் தானேயாய்த் தனிச் செங்கோல் புரியும் சக்கர வர்த்தியாகும்.]

ஆம்நாயகந்தருசிர ஸ்புரிதா தரோஷ்டம்
ஆஸ்ராவிலேக்ஷண மநுக்ஷண மந்தஹாஸம்,
கோபால டிம்ப வபுஷம் குஹநா ஜநந்யா :
ப்ராண ஸ்தநந்த யமவைமிபரம் புமாம்ஸம். (3)

விம்மியழ வேதமண மூதுமிதழ் பின்னும்
பம்மியுதிர் கண்விழிபு னன்முறுவன் மன்னும்
அம்மையெனு மாயையுயி ரம்மமுட னுண்ணும்
இம்மகவை யானறிவ னொருவ னென்றே. (3)

[வேத மணம் கமழும் திருவதரமானது, பவளத்தையொத்துத் திறந்து திறந்து மனித வர்க்கத்தாரைப்போன்று பசி காட்டி அழுவதைச் செய்துகொண்டும், தாமரை மலர்போன்ற திருக் கண்களினின்றும் மாயக் கண்ணீரை மாரிபோலப் பெருக்கிக் கொண்டும், தான் அவதரித்த காரணத்தைத் தானே நினைந்து, அதனாலே அடிக்கடி இவ்விருள்தருமா ஞாலத்தியல்பை யுன்னிப் புன்னகை புரிந்துகொண்டும், இளம் பருவத்துடனே திருவிளை யாடல்செய்து தொட்டிலிலே கிடக்க, வஞ்ச நெஞ்சத்தோடு மாதா வெனவந்து புகுந்த பூதனையின் பயோதரத்தைப் பரிந்துண்டவன் பரம புருஷனென்றே யான் அறிவேன்.]

ஆவிர்பவத்வ நிப்ருதா பரணம் புரஸ்தாத்
ஆகுஞ்சி தைகசரணம் நிப்ருதாந்ய பாதம்,
தத்நா நிமந்த முகரேண நிபத்த தாளம்
நாதஸ்ய நந்தபவநே நவநீத நாட்யம். (4)

தன்னணி கிளர்ந்தொளி கலந்தொரு சரண்தான்
முன்னிலகு குஞ்சித மிடப்பிற நிலைப்ப
மன்னுதயிர் தாளமிட மத்தினிடை யொத்தே
என்னநவ நீதநட மன்னனதென் முன்னே. (4)

[திருவாய்ப்பாடியில் அரசுபுரியும் நந்தகோபாலனுடைய திரு முற்றத்திலே திவ்வியாபரண பூஷிதனாய் விளையாடிக்கொண் டிருந்த கண்ணன், ஒரு தாளை முடக்கிக்கொண்டும், மற்றொரு தாளை நீட்டிக்கொண்டும் இருக்கையில், உள்ளே தயிர்கடைய, அத்தயிரிலே தோய்ந்து புரளும் மத்தோசையினையே தன் நடனத் திற்கேற்ற தாளமாக நினைந்து, ஆடுவோமாயின் வெண்ணெய் பெறலாமென்று அனைவரும் வியக்க நின்றாடிய திருக்கூத்து அடியேனைக் கவர்ந்ததாகையால் அந்தக் கூத்து என்முன்னே பிரசந்நமாகக்கடவது.]

ஹர்த்தும் கும்பே விநிஹிதகர: ஸ்வாது ஹய்யங்கவீநம்
த்ருஷ்ட்வா தாமக்ரஹண சடுலாம் மாதரம் ஜாத ரோஷாம்,
பாயாதீஷத் ப்ரசலிதபதோ நாபகக்சந் நதிஷ்டந்
மித்யாகோப: ஸபதிநயநே மீளயந் விச்வகோப்தா. (5)

கள்ளுவான் குடத்து வெண்ணெய் கையிடக் கண்ட தன்தாய்
கொள்ளுவான் வெகுண்டு நாடத் தாம்பினல் தேம்பிக் கண்டு
உள்ளுவான் போலுடன் தன் கண்ணிணை யரும்ப வாடித்
துள்ளுவான் போலு நின்ற துள்ளலில் வள்ளல் காப்பு. (5)

[உள்ளங்கவர்கள்வனுன கண்ணபிரான் இனிமையைத் தரும் வெண்ணெயைக் கொள்ளை கொண்டு உண்ணத் தாழியில் கை வைப்பதைக் கண்ட யசோதைப் பிராட்டி மிக வெகுண்டு, தன்னைக் கட்டக் கயிறு தேடிக் கொண்டு செல்வதைக் கண்டு, குழந்தைகளைப்போல் அங்கு மிங்கும் ஓடி ஒளியாமல் யோகிபோல அசையாமல் கண்களை மூடிக் கொண்டு கபடநாடகஞ் செய்த பரமாத்மாவான வள்ளலே ! அடியேனைக் காத்தருள் புரிதல் வேண்டும்.]

வ்ரஜயோஷித பாங்கவேத நீயம்
மதுராபாக்ய மநந்ய போக்ய மீடே,
வஸுதேவ வதூஸ்தநந்த யம்தத்
கிமபிப்ரம்ஹ கிசோர பாவத்ருச்யம். (6)

ஆயுள மதுரை யோர்வா யாயிர மமுத மூற
வாயிள மகளி ரம் பூங் கடைக்கணம் போச்சற் கொத்த
தாயிளம் பால் மணங்கொள் வாயிளம் பவள மூதும்
சேயிளம் பசுமை சான்ருன் சுருதி கட் கிறுதி யாவான். (6)

[வடமதுரையின் கண் வசித்து வரும் மக்கள் செய்த பெரும் பாக்கியத்தால் அந்நகரிலே வந்து அவதரித்தவனும், ஆயர் மங்கையர்களின் கடைக்கண் நோக்கிற்கு ஈடுபட்டு மனைகள் தோறும் விரும்பி யோடியவனும், இவ்வள வென்று கூற வொண்ணுத அந்தமில் இன்பத்தைப் பலருக்குத்தர வல்லவனும், தேவகீ தேவியின் திருமுலைப்பாலை இன்பமாய் உண்டவனும்,

குழந்தைகளின் தன்மையைப் போலவே எவ்விதங்களினும் நடித்துக் காட்டுகின்றவனும், முக்கரணங்களுக்குங் கிட்டாதவனுமான தத்துவ ஸ்வரூபியான வேதாந்த விழுப் பொருளாங் கண்ண பிரானைத் துதிக்கின்றேன்.]

பரிவர்த்தித கந்தரம் பயேந
ஸ்மித புல்லாதர பல்லவம் ஸ்மராமி,
விடபித்வ நிராஸகம் கயோச்சித்
விபுலோ லூகல கர்ஷகம் குமாரம். (7)

விஞ்சியோ ருரலோ டேக்கம் பூக்கவே யாக்கப் பண்ணி
அஞ்சியே யருளி யன்னைக் கருளிளஞ் சிங்க நோக்கி
அஞ்சுவார் தஞ்சச் செல்வம் தவழ்திரு முறுவல் பூத்து
வஞ்சிலா மரத்தி னூடுற் றிறுத்த தென் மனத்தி னூடே. (7)

[அன்னையாகிய அசோதை தன்னைக் கயிற்றுலே கட்டியதற்குப் பயந்து தன் கழுத்தை ஒரு பக்கமாகத் திருப்பிக் கொண்டவனுகியும், தனது தன்மையை நினைத்துப் புன் முறுவலால் ஒளி விடும் பல் வரிசையோடு கூடிய அதரத்தையுடையவனுகியும், சாபத்தாலே மருதமரமாக வளர்ந்து நிற்கும் கந்தர்வர்களது துன்பத்தைத் துடைத்து இன்பமளிக்க, தன்னைப் பிணித்துள்ள உரலையும் இழுத்துக் கொண்டு தவழ்ந்த குழந்தையைத் துணை பெற வேண்டித் துதிக்கின்றேன்.]

நிகடேஷு நிசாமயாமி நித்யம்
நிகமாந்தை ரதுநாபி ம்ருக்யமாணம்,
யமளார்ஜுந த்ருஷ்டபால கேளிம்
யமுநாஸாக்ஷிக யௌவநம் யுவாநம். (8)

அடியற்று வீழ மரமொற் றிரண்டி னடுவுற்ற வொத்த னருளின்
படியே யளைந்த புனலே கிளர்ந்த புகழேவளர்ந்த படிவம்
முடிகோடி கொண்டு மெழுவேத மின்று மடிதேட நின்ற முதல்வன்
முடிசூடி நன்று மதுசூத னென்றன் முனதா து சந்த மெழுவான் (8)

[இளமைப் பருவம் நீங்காத போதே இரண்டு பெரிய மருத மருங்களை அவலீலையாகக் கீழ்த் தள்ளிய அதிமாநுஷ சேஷ்டிதங்

களைக் காட்டியவனும், யமுனை யாற்றிலே குதித்துக்கோகுலத்தவர் வாழத்ததன் இளமையிலே அசகாய சூரனாக விருந்தவனும், வேத வேதாந்தங்களும் தேடியும் அகப்படாத அரிய பெரிய சிறப்புக் களை யுடையவனுமான பாலகிருஷ்ணனை அடியேன் பிரதி தினம் கிட்டித் தொழுகின்றேன்.]

பதவீ மதவீ யஸீம் விமுக்தே
ரடவீ ஸம்பத மம்புவாஹ யந்தீம்,
அருணாதர ஸாபி லாஷ வம்சாம்
கருணாம் காரண மாநுஷீம் பஜாமி. (9)

சேரிரு ளடவிச் செல்வம் செழுமுகிற் கருமை சாறச்
சீரியர் நாடி நண்ணும் வீடியல் வழி தழைப்ப
ஆரருள் சுரக்கு நீதி யறநிறக் கரிய கோலக்
காரணக் குழவிக் கண்ணன் குழலிதழ் குழைய நின்றான். (9)

[அகிலலோக நாதன் மநுஷ்யாவதாரம் எடுத்து வனத்திலே கடல் நீரைப்போலும் கருமையான திருமேனியோடு விளையாடிக் கொண்டும், அனைவரும் இன்பமடையத் தனது அழகிய திரு வாயினிடத்தே முரளியென்னும் திருநாமத்தை யுடைய வேய்ங் குழலை வைத்துக் கானம் செய்துகொண்டும், தானே மோக்ஷ வீடளிக்கும் முழுமுதல்வனானவனென்பதைக் காட்டிக் கொண்டிரா நிற்கும் கண்ணபிரானைத் தியானிக்கின்றேன்.]

அநிமேஷ நிஷேவணீய மக்ஷ்ணோ
ரஜஹத் யௌவந மாவிரஸ்து சித்தே,
கலஹாயித குந்தளம் கலாபை:
கரணோந் மாதக விப்ரமம் மஹோமே. (10)

அலகிலா வெழில் குலாவும் அளகமீ தெழு கலாபக்
கலைகளார் மறை கொள் மேகப் போகனென் மோகனாகி
நலமுறுங் கலவி யூறுங் கண்ணிணைக் கிமையாக் காட்சி
இலகவே தந்த சோதி யென்மனம் கோயில் கொண்டான். (10)

[இந்திரியாதிகட்கெல்லாம் ஸதாபரம ஆஹ்லாதத்தையே அருள் புரிபவனும், வைத்தகண்ணை வாங்காமலும், இமைகொட்டா

மலும், சேவிக்கத்தக்க பேரெழிலுடையவனும், என்றும் ஒரு நிலையான யௌவனப் பொலிவுடனே இருப்பவனும், மயிலின் தோகையோடு மாறுகொண்டு விளங்கா நின்ற கேசத்தை யுடையவனுமான கண்ணபிரான் அடியேனது மனத்தே வந்து பிரகாசிக்கப் பிரார்த்திக்கின்றேன்.]

அநுயாயி மநோஜ்ஞ வம்ச நாளை:
அவதுஸ்பர்சித வல்லவீ விமோஹை:,
அநகஸ்மித சீதளைரஸௌமாம்
அநுகம்பாஸரிதம் புஜை ரபாங்கை:. (11)

குனிதரும் குடவர்காமக் கடல்தரும் குழலினுளப்
பனிதரும் புகழின்வாய்மைக் கனிதரும் முறுவன் மின்னத்
தனதருண் மழையினேடைத் தழைவிழிப் பதுமச் செல்வத்
தினிதரும் தருமவண்ணக் கண்ணனே தருவனின்பம். (11)

[ஸ்ரீ கண்ணபிரான், தனது திருவதரத்தில் அழகாக வைத்திருக்கப்பட்ட வேய்ங்குழலோசையினலே பின்னே போக்கப்பட்ட ஆநிரைகளைச் சேர்க்கப்படும் நாதத்தைச் செய்பவனுகியும், அவ்வினிய நாதத்தாலேயே ஆயர்குல மகளிராகிய கோபிகைகளுக்குப் பெரியதொரு வியாமோகத்தை யுண்டுபண்ணுவதாகச் செய்பவனுகியும், தன் புன்னகையினுலேயே சகல ஆன்மாக்களையுங் குளிரச் செய்பவனுயும், கருணையாகிய நதியினிடத்திலே இரண்டு தாமரைகள் விகஸித்தாற்போல விளங்கும் திருக்கண்களை யுடைய கண்ணபிரான், தமது கடைக் கண்ணினுல் அடியேனை ரக்ஷித்தருளக்கடவன்.]

அதராஹித சாருவம்ச நாளா:
மகுடாலம்பி மயூரபிஞ்ச மாலா:,
ஹரிநீல சிலாவிபங்க நீலா:
ப்ரதிபாஸ் ஸந்து மமாந்திம ப்ரயாணே. (12)

புகழிதழ் புரிய நாளக் குழல்தழைத் தெழுக லாபம்
மகிழ்தரும் குஞ்சி கொஞ்சும் மஞ்சுலாங் குடைநி ழற்ற
முகில்கொண்மா மணிகொ ழிக்கு மிந்திர நீல முத்தம்
திகழுமிவ் வழகின் வண்ணம் நிகழ்கவென் னினைவி லந்நாள். (12)

[ஸ்ரீகண்ணபிரான் தனது திருவதரத்திலே இடத்தோளோடு சாய்த்து இருகைகூடப் புருவம் நெறித்தேற குடவயிறுபட வைத்து ஊதும் புல்லாங்குழலோடு பொலியுஞ் சேவையும், கிரீடத்திலே தொங்குகின்ற கருங்கண் தோகை மயிற்பீலியோடும், இந்திர நீலக்கல்லை யொத்து கருமையோடு விளங்கா நின்ற தேஜோமயமான ஞான ஸ்வரூபாதிகள் எனது சரமதசையிலே வந்து என்னைக் கிருதார்த்தனுக்கப் பிரார்த்திக்கின்றேன்.]

அகிலா நவலோகயாமி காலாந்
மஹிளாதீந புஜாந்தர ஸ்யயூந: ,
அபிலாஷ பதம் வ்ரஜாங்க நாநாம்
அபிலாபக்ரம தூரமாபிரூப்யம். (13)

கழிபெருந் திருவின் கற்பே களிநடம் புரியு மார்வின்
மொழிகடந் தொளி மிளிர்ந் தோங் களிதரு மழகின் மேனி
எழுகடற் காம வாயர் சிறுமியர்க் கொருமயக்காம்
முழுநலக் கொழுந னுளும் மகிழ்வனென் மனத்தி னுள்ளே. (13)

[அலகிலா அருள் பூண்டஉருக்குமணிப் பிராட்டியினுலே அன்புடன் ஆலிங்கனம் செய்யப் பெற்ற திருமார்பினை யுடையவராகியும், ஆயர் பாடியில் வசித்து வரும் கோபிகா ஸ்திரீகளின் பேராவலுக்கிடமாக விருப்பவராகியும், இவ்வண்ணத்தன், இத்தகையன், இப்பெற்றியுடையான் என்பதை வருணித்துக் கூறுவதற்கு இயலாதவனான கண்ணபிரானது திவ்ய ஸௌந்தரியாதிகளை எக்காலும் நினைந்து நினைந்து தொழுகின்றேன்.]

ஹ்ருதிமுக்த சிகண்ட மண்டநோ
லிகித:கேந மமைஷ சில்பிநா ,
மதநாதுர வல்லவாங்கநா
வதநாம் போஜ திவாகரோயுவா. (14)

வீங்க னங்கர் பூஞ்சரங்கள் பெய்யு முல்லை மெல்லியார்
ஏங்கு கஞ்ச வாண் முகர்க் கிரங்குமா யிரங் கரம்
தாங்கு சோதி யோங்கு பிஞ்ச மாந்து குஞ்சி யஞ்சனன்
தேங்க வென் னுளத்தி லிங்கு சித்தி ரித்த சிற்பியார் ? (14)

[மனத்திற்கு மிகவும் இனிமை தரும்படியான அழகு வாய்ந்த மயிற்கண் தோகையைத் திருவாபரணமாய்ப் பூண்டு விளங்கு பவனும், மன்மதன் விரகத்தாலே தபித்துக் கொண்டிருக்கும் ஆயர் பெண்களின் முகமாகிய தாமரை மலரை விகஸிக்கச் செய்கின்ற சூரியனுகை விளங்குபவனும், யௌவன பருவமுள்ள வனும், ஆகிய எந்த ரூபலாவண்யமுள்ள புருஷச் சிரேஷ்டன் என் மனத்திலே இருக்கின்ருனே அவ்வுத்தம புருஷனை என் இருதயத்திலே எழுதின சிற்பி தான் யாரோ ?]

மஹஸே மஹிதாய மௌளிநா
விநதே நாஞ்சலி மஞ்ஜநத்விஷே,
கலயாமி விமுக்த வல்லவீ
வலயாபாஷித மஞ்ஜுவேணவே. (15)

விஞ்சு காதன் மஞ்சொலித் தொடிக் கிசைந்த வின்குழல்
கொஞ்சு வாய் மலர்ந்த தஞ்ச வஞ்சனக் கொழுந்தினுக்
கஞ்சி யென் தலைத்தரைப் படப்பணிந் தருள் கொளும்
அஞ்சலிக் கரங் குவித் தடிக் கிடப்ப னுளுமே. (15)

[அதிக தேஜோவானுகியும், அஞ்சனத்தை யொத்து இருண்ட திருமேனியை யுடையவனுகியும், நாணத்தையே தங் களது உயிராகக் கொண்டவர்களான கோபிகாஸ்திரீகளின் கையிலே ஒளிரும் வளையல்கள் எவ்வாறு சப்திக்குமோ அவ் வாறு இனிமையாகச் சப்திக்கும் வேய்ங்குழலையுடையவனுகியும், காலபரிச்சேத மில்லாமல் எக்காலத்தும் எல்லோராலேயும் போற் றிப் புகழப் பெற்றவனுகியும், ஸர்வ ஜகத்காரணபூதனை கண்ண பிரானைச் சிரத்தினலே வணங்குகின்றேன்.]

ஜயதிலளிதவ்ருத்திம் சிக்ஷிதோ வல்லவீனும்
சிதிலவலயசிஞ்சா சீதளைர் ஹஸ்ததாளை:,
அகில புவநரக்ஷா கோபவே ஷஸ்யவிஷ்ணோ:
அதர மணிஸுதாயா மம்சவாந் வம்சநாள:. (16)

தொடத்தரு மணித் தொடி யிழைத் தொனி குழைப்ப
இடத்திரு கரத் துறு சதித் திரு திருத்த
இடைத்திரு வுடைத் தனி யிறைத்திரு விதழ்த் தேன்
குடித்தெழு மொலிப் புகழ் மணிக் குழல் துதிப்பாம். (16)

[கண்ணபிரான் மேலே கொண்டுள்ள ப்ரேமாதிசயத்தினாலே, அதனைக் கிட்டப் பெருமையாலே நழுவுகின்ற கைவளையல்களின் ஓசையால், சீதளத்தை யடைந்தவர்களான கோபிமாதர்கள் ஒன்றாகச் சேர்ந்து கரத்தாலே தாளங்களைப் போட்டுக் கொண்டு பாடுகின்ற பாட்டினுடைய நடையினையே பின்பற்றுவது போல, ஸர்வ லோகங்களையும் காத்து ரக்ஷிக்க வேண்டுமென்றே மானிட வுருவமாகத் திருவவதாரமெடுத்துள்ள கண்ணபிரானின் திருவ தரத்திலே பொருந்திப் பொலியும் வேய்ங்குழல் இனிய வோசை யைச் செய்யா நின்று மேன்மை பெற்றது.]

சித்ராகல்பச் ச்ரவஸிகலயன் லாங்கலீ கர்ணபூரம்
பர்ஹோத் தம்ஸஸ் புரிதசிகுரோ பந்துஜீவன்ததாந:,
குஞ்ஜா பத்தா முரஸிலளிதாம் தாரயந் ஹாரயஷ்டிம்
கோபஸ்திரீணும் ஜயதிகிதவ: கோபிகௌமாரஹாரீ. (17)

சித்திரப் பூணின் சேர்த்தி திகழ் செவிப் பூவின் செவ்வி
மைத்திரு முடியின் சோதி மழைத் தடக் கூந்தற் காந்தி
புத்தெழிற் பந்து சீவம் கொஞ்சு மோர் குஞ்ச மாலை
ஒத்திள மடவா ருள்ளக் கள்வ னுர் வெற்றி போற்றி. (17)

[விசித்திரமான சதங்கைகள் கொஞ்சிடத் தமனியத் தண்டை கள் ஒளிரப் பதம் பொருந்திய பரிபுரம் பண்ணிசை பரப்ப வெழு கின்ற வலங்காராதிகளுடனும், காதுகளில் தென்னங்குருத்துக் களால் வளையப்பட்ட காதணிகள் அசைந்தசைந்து உலவிக் கொண்டும், மயிலினது தோகைகளினால் அலங்கரித்துத் தொங் கும் தலைமயிரில் சிவந்துள்ளதான செம்பருத்திப் பூவைச் சொரு கிக் கொண்டும், மார்பிலே குன்ற மணிகளினாலாகிய மாலையை வனமாலைபோலே தரித்து, கோகுல மாதர்களின் யௌவன பரு

வத்தைக் கவர்ந்து, அவர்கள் மனத்தைக் கொள்ளை கொள்ளும் ஒப்பற்ற பரமபுருடன் ஒருவன் விளங்குகின்ருன்.]

லீலாயஷ்டிம் கரகிஸலயே தக்ஷிணே ந்யஸ்ய தந்யாம்
அம்ஸேதேவ்யா: புளகருசிரே ஸன்னிவிஷ்டாந் யபாஹு:,
மேகச்யாமோ ஜயதிலளிதோ மேகலாதத்தவேணு:
குஞ்ஜாபீட ஸ்புரிதசிகுரோ கோபகந்யா புஜங்க:. (18)

வலக்கரம் பிடிக்க வோர்கோ லிடக்கரம் வளைக்க வாங்கே
விலக்கறக் களிபுடைத்தா யிளையர் தோள் புளகம் பூக்கக்
கலக்கவே தலையிற் குஞ்சம் கனகமே கலையின் மூங்கில்
குலக்கரும் பெனப்பு லம்பும் கன்னிமார் கன்னல் வாழி. (18)

[கோகுலத்து மாதர்களின் வியாஜ நாயகனுகிய கண்ண பிரான் தனது திருக்கரத்தில் சுகிர்தம் பெற்றுள்ளதான கோலை விளையாட்டின் நிமித்தமாக வைத்துக் கொண்டவனுகியும், தன்னிடம் அன்புமிகுந்த ஒரு நாயகியின் தலைமயிரானது செறிந்து அவிழ்ந்து தோளில் தொங்கிக் கொண்டிருக்க, அதனைக் கோதி முடிக்க அபிலாஷை கொண்டுள்ளவனைப்போலத் தனது மற்ருெரு கரத்தை அவளது தோளின்மேல் வைத்துக் கொண்டு மிக்க சோபையோடு தனது செவ்வாயினிடத்தே புள்ளாங்குழலை வைத்துக் கொண்டும், குருவிந்தமலர்களினுலே அலங்காரமாகத் தொடுக்கப்பட்டதைத் தலையிலே வைத்துக் கொண்டும் நீலநிற மேகத்தின் நிறத்தை யொத்துப் பிரகாசிப்பவனுக விளங்குகின்றனன்.]

ப்ரத்யாலீட ஸ்திதிமுபகதாம்
ப்ராப்த காடாங்கபாளிம்
பச்சாதீஷந் மிளிதநயனும்
ப்ரேயஸீம் ப்ரேக்ஷமாண :,
பஸ்த்ராயந்த்ர ப்ரணிஹிதகரோ
பக்த ஜீவாதுரவ்யாத்
வாரிக்ரீடா நிபிடவஸநோ
வல்ல வீவல்லபோந :. (19)

இலகு தோள் வலவ னுர்ப்பப்
பிரத்தி யாலீடம் நின்றே
கலை விளங் களி குழிக்கும்
கணை விழி காணும் கண்ணன்
குல விளங் குமரிகட் காங்
கரத் திருத் துருத்தி பெய்யும்
மலி புகழ்த் துகின னைத்தே
மகிழ்வ னேர் பத்த ராவி. (19)

[தன்னிடம் அன்புகொண்டுள்ளவர்களாகிய பக்தர்களைக் காப்பதே கடமையாகக் கொண்டவனும், நீர்விளையாட்டால் நனைந்த வஸ்திரத்தை அரையிலே உடுத்திக்கொண்டு, வில்லாளிகளைப்போல் வலக்காலை முன்னே வைத்து இடக்காலை மண்டலித்துக்கொண்டு நின்று, தன்னைப் பரிவோடு அணைந்த இன்பத்தினாலே கண்களைக் கொஞ்சம் மூடியுந் திறந்தும், எதிரிலுள்ள நாயகியைக் கண்டு தோலாற் செய்த பீச்சாங்குழலைக் கையிலெடுத்து விளையாடல் புரியும் கண்ணபிரான் நம்மைக் காத்தருள் செய்யக் கடவன்.]

வாஸோ ஹ்ருத்வா திநகரஸுதா ஸந்நிதௌ வல்ல வீநாம்
லீலாஸ்மேரோ ஜயதிலளிதா மாஸ்தித : குந்தசாகாம்,
ஸவ்ரீளாபிஸ் ததனுவஸநே தாபிரப் யர்த்யமாநே
காமீகச்சித் கரகமலயோ : அஞ்சலிம் யாசமாந :. (20)

வந்து நீரளைந்த மாதர் கூறை வாரி யேறியோர்
குந்த மீது மந்த காச முந்து மா முகுந்தனே
தந்த நாண முந்துவா னுதற் றுகில் பிதற்றவே
முந்தியஞ் சலிக்க ரங்கள் கெஞ்சு தஞ்சன் வாழியே. (20)

[விஷம்படு நாகத்தை வால்பற்றி யீர்த்த கண்ணன் யமுனையாற்றின் கரையில், நீர்விளையாட்டிலே மூழ்கிக் கிடக்கும் கோபியர்களின் ஆடைகளனைத்தினையும் கவர்ந்துகொண்டும், புன்னகை செய்துகொண்டு தழைத்துக் கிளைத்த குருந்த மரத்தின் கிளையின் மேல் ஏறிக்கொண்டு நிற்கவும், அப்போது நாணமே உயிரினும்

மேம்பட்டதென்று நினைக்கும் ஆயர்குல மகளிர்கள் ஒன்றுந் தோன்ருதவர்களாய், இவரிடம் ஆடைகளை யாசித்துப் பெறுவதே தகுதியெனத் தனது மலர்புரையுங் கையை மேலே தூக்கிச் சேவிக்க மனமகிழ்ந்தவனே ஜகத் காரணப்பொருளாகப் பிரகாசிக்கிருன்.]

இத்யநந்ய மநஸாவி நிர்மிதாம்
வேங்கடேச கவிநா ஸ்துதிம்படந்,
திவ்யவேணு ரஸிகம் ஸமீக்ஷதே
தைவதம் கிமபி யௌவத ப்ரியம். (21)

என்றிதோர் பக்க நோக்கில்
லாதவன் பாத மோதும்
வென்றிசால் வேங்க டேசன்
வழுத்துமிவ் விருத்தம் பாடி
நின்றவர் குழல் குலாவு
மாயமா நேய மாலை
நன்றுவாழ் வுறுவர் நாளும்
கண்ணிணை களிக்கக் கண்டே. (21)

Q22:417
N52

[இவ்விதமாகக் கூறிவந்த சரிதஸாகரத்தில் அமிழ்ந்து ஒரே மனநிலையுடையவராகி, திருவேங்கட நாதனது கண்டையேவேங்கடேச கவியென்னும் பெயரோடும் வேதாந்த தேசிகன் என்னுந் திருநாமத்தோடும் தோன்றியகவி தார்க்கிக சிம்மத்திஞலே செய்யப்பெற்ற இந்தக் கோபாலவிம்சதி யென்னும் இருபது சுலோகத்தாலாகிய பிரபந்தத்தைப் படிக்கின்றவர், வேய்ங்குழலிசை செய்து மகிழுபவனும் கோபியர்களின்மேல் அளவுகடந்த அன்பினை வைத்துள்ளவனுமாகிய ஒரு பரப்பிரஹ்ம மூர்த்தியின் கிருபைக்குத் தட்டில்லாமல் பாத்திரமாகின்ருர்.]

83162